# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (18.11.2015 முதல் 22.11.2015)

***அறிக்கை எண் 90-2015*** ***தேதி: 17.10.2015***

***மாநிலத்தின் கடந்த வார வானிலை***

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 23°செ முதல் 32°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 20°செ முதல் 25°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 11°செ முதல் 18°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 8°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் மிதமான முதல் கன மழை காணப்பட்டது.

***எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (18.11.2015 முதல் 22.11.2015)***

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 84 முதல் 88 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 80 முதல் 84 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம். (%) | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18.11.15 | 14 | 30 | 22 | 8 | 88 | 84 | 6 | வடகிழக்கு |
| 19.11.15 | 12 | 30 | 22 | 8 | 88 | 84 | 6 | வடகிழக்கு |
| 20.11.15 | 8 | 30 | 22 | 8 | 86 | 82 | 6 | வடகிழக்கு |
| 21.11.15 | 8 | 30 | 22 | 8 | 86 | 82 | 6 | வடகிழக்கு |
| 22.11.15 | 2 | 30 | 22 | 8 | 84 | 80 | 6 | வடகிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை மற்றும் மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ மழை நீரை சேகரிப்பதன் மூலம் பிற்காலத்தில் பயன்படுத்தலாம்.
- ✓ காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் திராட்சையில் அடிச்சாம்பல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த ஒரு சதவீதம் போர்டாக்ஸ் கலவையை மழை இல்லாத நாட்களில் தெளிக்கவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையை கருத்தில் கொண்டு குளிர்கால கம்போடியா பருத்தி அறுவடையை தள்ளிப்போடவும்.
- ✓ வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதால் செடிகளில் வேர்களின் செயல்முறை குறைவாக இருக்கும். எனவே மண்ணின் வழியாக உரமிடுவதை தவிர்க்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை மற்றும் மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**